மொத்தம் 689 பாலங்கள் எடுக்கப்பட்டு இந்த நடப்பாண்டிலே 785 கோடி ரூபாயிலே இப்போது கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எஞ்சியிருக்கிற ஏனைய பாலங்கள் இந்த ஆண்டு, 2022-2023 ஆம் நிதியாண்டிலே CRIDP திட்டத்தின் மூலமாக 66 பாலங்களும், NABARD கிராமச் சாலை திட்டத்தின் மூலமாக 84 பாலங்களும், தேசிய நெடுஞ்சாலைகளின் மூலமாக 22 பாலங்களும் எடுக்கப்பட்டு, பணிகளுக்கெல்லாம், tender கோரப்பட்டு, 172 பாலங்களை இந்த ஆண்டிலே முடிப்பதாக இருக்கிறோம். ஆக, ஒட்டுமொத்தமாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன அடிப்படையிலே பார்க்கிறபோது, ஏறத்தாழ 861 பாலங்கள் இந்த நிதி ஆண்டோடு நிறைவடைகின்றன. எஞ்சியிருக்கிற 420 பாலங்களை அடுத்த நிதியாண்டு 2023–2024–லே எடுக்கவிருக்கிறோம். அதனால், பல சட்டமன்ற உறுப்பினர்கள் கையைத் தூக்குகிறபோது, தங்களது தொகுதிக்கு பாலம் வேண்டுமென்று கேட்கிற காரணத்தினால்தான், ஒட்டுமொத்தமாக இந்தப் புள்ளிவிவரங்களைத் தந்திருக்கிறேன். ஏனைய பாலங்களை—மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு அடுத்த நிதியாண்டில் இந்த 420 பாலங்களும் கட்டப்பட்டால், அவர்கள் தேர்தல் அறிக்கையிலே சொன்னதைப்போன்று, ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலும், 1,281 தரைப் பாலங்களும் மேம்பாலங்களாக கட்டி முடிக்கப்படும் என்கிற நல்ல செய்தியை உங்களிடத்திலே நான் பகிர்ந்துகொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல், மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.

20—

ஆதரவற்றோர் இல்லம்

***51168—திருமதி கு. மரகதம் குமரவேல்:**

மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதி, மதுராந்தகத்தில் ஆதரவற்றோர் இல்லம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 19]

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தற்போது மதுராந்தகம் தொகுதி, மதுராந்தகத்தில் ஆதரவற்றோர் இல்லம் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஏனெனில், ஏற்கெனவே செங்கல்பட்டு மாவட்டத்தில் தன்னார்வத் தொண்டு நிறுவனம்மூலம் நடத்தப்படும் பதிவு பெற்ற முதியோர் இல்லங்கள் மொத்தம் 22 செயல்பட்டு வருகின்றன. அதில் மதுராந்தகம் தொகுதியிலேயே வில்லவராயன் நகரில் மாநில அரசின்கீழ் மானியம் பெறும் Duraisamy Generous Social Education Association *என்ற மூத்த குடிமக்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளை உள்ளடக்கிய ஓர் ஒருங்கிணைந்த இல்லமும், ஒன்றிய அரசின் மானியம் பெறும்* Bureau of Integrated Rural Development *என்ற ஓர் இல்லம் பெரும்பேர் கண்டிகை கிராமம், தொழுப்பேட்டிலும் செயல்பட்டு வருகின்றன. மேலும், மதுராந்தகம் தொகுதியில் புதிதாக ஆதரவற்ற முதியோருக்கான முதியோர் இல்லம் அல்லது ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் முதியோர்கள் உள்ளடங்கிய ஒருங்கிணைந்த வளாகங்களை நிறுவிட தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் முன்வரும்பட்சத்தில் அவ்வில்லங்களுக்கு அரசின் மானியங்களை வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 21, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

21—

கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களைக் கட்டுப்படுத்துதல்

***14292—திரு. நயினார் நாகேந்திரன்:**

மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி தொகுதி, திருநெல்வேலியில் மழைக் காலங்களில் கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களைக் கட்டுப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?